பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

10 08 2026 MONDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் நாட்டு மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

2. எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக, நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன.

3. அரசு மின்னணு சந்தையின் வர்த்தகம், கடந்த பத்தாண்டுகளில் ஒரு லட்சத்து 55 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

4. உலக சிங்கங்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

5. Hormuz நீரிணைப் பகுதியில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான செயல்திட்டத்திற்கு ஈரான் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

**>>>>>><<<<<<**

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் நாட்டு மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் நமது பயணத்தில், ஒவ்வொருவரின் பங்களிப்பையும் புதுப்பிக்கும் வகையில் Har Gar Tiranga இயக்கத்தை வலுப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிற்கு நமது சிறப்பான பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற உற்சாகத்தை தேசியக்கொடி ஏற்படுத்தி தருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டின் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தை, வந்தேமாதரம் தேசியப் பாடலுக்கு அர்ப்பணிப்பதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

நீட் வினாத்தாள் முறைகேடு தொடர்பாக மாணவர்கள் புதுதில்லியில் நடத்திய போராட்டத்தின் போது காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, மக்களவையில் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள்

அமளியில் ஈடுபட்டதால், மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இன்று காலை அவை தொடங்கியதும், கேள்வி நேரத்தை ஒத்தி வைத்துவிட்டு, இப்பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோஷங்களை எழுப்பினர்.

மாணவர்கள் போராட்டத்தின் போது, காவல்துறையினர் நடத்திய தாக்குதல் குறித்து, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அவையில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்தனர்.

தொடர்ந்து அமளி நீடித்ததால், முதலில் நண்பகல் 12 மணிவரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் மக்களவை ஒத்தி வைக்கப்பட்டது.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தை ஒத்தி வைத்துவிட்டு, தில்லியில் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இதற்கு அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து அவர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, மாநிலங்களவையும் நண்பகல் 12 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

இருப்பினும், நிதி குறித்த நாடாளுமன்ற நிலைக்குழு அளித்த அறிக்கை மற்றும் நகர்ப்புற வீட்டுவசதி துறை, சமூகநீதித் துறை ரயில்வே துறை ஆகியவற்றின் அறிக்கைகளும் அவையில் தாக்கல் செய்யப்பட்டன.

பின்னர் அவை கூடியபோது, அமளி நீடித்ததால், மாநிலங்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

>>>>>><<<<<<

அரசு மின்னணு சந்தை GeM-ன் வர்த்தகம், கடந்த பத்தாண்டுகளில் ஒரு லட்சத்து 55 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், GeM-ல் 12 லட்சத்துக்கும் மேற்பட்ட சிறு குறு நிறுவனங்கள் பதிவு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதில், மகளிர் தலைமையிலான 2 லட்சம் நிறுவனங்களும், 42 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்களும் பதிவு செய்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் திட்டங்கள் மூலம், அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

GeM மூலம் அரசு அலுவலகங்களில் வெளிப்படைத்தன்மையுடன் பொருட்களை வாங்கி வருவதாக திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

இந்திய கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் Krishna Swaminathan 4 நாள் பயணமாக இன்று மொரீசியஸ் புறப்பட்டார். அந்நாட்டுடன் இருதரப்பு கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், பாதுகாப்பு துறையில் இணைந்து செயல்படவும் அவரது இந்தப் பயணம் வழிவகுக்கும் என்று பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்மிரல் Krishna Swaminathan இந்தப் பயணத்தின் போது, மொரீசியஸ் நாட்டு தலைவர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளை சந்தித்து பேசவுள்ளார்.

கடல்சார் பாதுகாப்பு, இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் கூட்டாக கடற்படையை வலுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு முக்கிய விஷயங்கள் குறித்து அந்நாட்டு தலைவர்களுடன் அவர் விவாதிக்கவுள்ளார்.

>>>>>><<<<<<

உலக அளவிலான ஜவுளி சந்தையின் தேவைக்கேற்ப தரமான, ஜவுளி மற்றும் ஆடைகளை நெசவாளர்களும், ஆடை வடிவமைப்பாளர்களும் தயாரிக்க வேண்டும்

என்று ஜவுளி அமைச்சகத்தின் செயலர் திருமதி. Neelam Shami Rao தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தேசிய ஆடை வடிவமைப்பாளர்கள் கருத்தரங்கை தொடங்கி வைத்தப் பேசிய அவர், உலக தரத்திலான ஜவுளியை உற்பத்தி செய்வதன் மூலம், வருவாயை கணிசமாக பெருக்க முடியும் என்று கூறினார்.

ஆடை வடிவமைப்பு மற்றும் வேலைப்பாடுகளை உருவாக்குவதில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில், நெசவாளர்களும், வடிவமைப்பாளர்களும் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் திருமதி. Neelam Shami Rao தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக, நாட்டில் ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உலக சிங்கங்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, மத்திய அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் எழுதியுள்ள கட்டுரையை தமது சமூகவலைதளத்தில்

பகிர்ந்துள்ள பிரதமர், வன உயிரினங்களை பாதுகாப்பதற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

திரு. புபேந்தர் யாதவின் கட்டுரையில், கடந்த 2020ஆம் ஆண்டு 30 ஆயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பளவாக இருந்த, சிங்கங்களின் வாழ்விடம் தற்போது 35 ஆயிரம் சதுர கிலோமீட்டராக அதிகரித்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதையும், பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு 523ஆக இருந்த சிங்கங்களின் எண்ணிக்கை, 2025ஆம் ஆண்டு 891ஆக அதிகரித்துள்ளது என்பதையும் பிரதமர் தமது சமூகவலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா வெளியிட்டுள்ள பதிவில், நாட்டில் ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கை, 891ஆக அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்தாண்டுகளில் இந்த எண்ணிக்கை 32 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளையொட்டி, மத்திய வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மத்திய அரசின் பல்லுயிர் பெருக்க

பாதுகாப்பு நடவடிக்கையின் மூலம், இந்தியாவில் ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

சிங்கங்களை வனப்பகுதிகளில் பாதுகாப்பதில், வனஅலுவலர்கள், பாதுகாவலர்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்று திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

Hormuz நீரிணைப் பகுதியில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான செயல்திட்டத்திற்கு ஈரான் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்த ஈரான் நாடாளுமன்ற செய்தி தொடர்பாளர் திரு. Hassan Uashqav, தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவு கொள்கை குழு, இதற்கான ஒப்புதலை அளித்துள்ளதாக தெரிவித்தார்.

இதற்கான சட்ட மசோதா நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் 13ஆம் தேதி கொண்டுவரப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் விவாதமின்றி, பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை குழு அளித்துள்ள பரிந்துரையின் பேரில், இதற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைத்துள்ளதாகவும் திரு. Hassan Uashqav கூறினார்.

>>>>>><<<<<<

ஜார்க்கண்ட் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு வினாத்தாள் முன்கூட்டியே வெளியான விவகாரம் தொடர்பாக, ராஞ்சியில் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பேரணி நடத்தினர்.

இதுதொடர்பான தேர்வுகள் ரத்து செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாணவர்களின் 98 சதவீத கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டதாக ஜார்க்கண்ட் மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதனிடையே, அம்மாநில முதலமைச்சரின் இல்லம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சித் தலைவர் திரு. Babulal Marandi, பிஜேபி மாநிலத் தலைவர் திரு. ஆதித்ய சாஹூ உள்ளிட்டோரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

>>>>>><<<<<

ஜம்மு கஷ்மீரின் உதம்பூர் மாவட்டத்தில், Samarth திட்டத்தின் கீழ், மகளிருக்கு கைவினைப் பொருட்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கைத்தறி நெசவு மற்றும் கம்பளி தயாரிப்பில் அவர்களின் திறனை மேம்படுத்துவதற்கு, ஒருமாத கால பயிற்சி அளிக்கப்படுகிறது.

கம்பளி தயாரிப்பில் பதப்படுத்துதல், கை நெசவு மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வது போன்றவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

இதன்மூலம் கிராமப்புற பகுதிகளில் உள்ள மகளிர், சுயவேலைவாய்ப்பு பெறுவதற்கு வழிவகை ஏற்பட்டுள்ளதாக எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

நாட்டுப்பற்றையும், ஒருமைப்பாட்டையும் மக்களிடையே வலுப்படுத்தும் நோக்கில் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் நாடுமுழுவதும் நடைபெற்று வருகிறது.

பிஜேபி சார்பில் நாகாலாந்து மாநிலம், கோஹிமாவில் இன்று இதனையொட்டி, மூவர்ண தேசியக்கொடி ஏந்திய இருசக்கர வாகன பேரணி நடைபெற்றது.

இந்த பேரணியை, அம்மாநில அமைச்சர் திரு. Temjen Along கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

முன்னதாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், தேசியக்கொடியின் பெருமையையும், மாண்பையும் மக்களுக்கு எடுத்துச் செல்வதில் இளைஞர்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட், மேற்கு மத்தியப்பிரதேசம், கிழக்கு ராஜஸ்தான் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹரியானா, பஞ்சாப், உத்தரப்பிரதேசம், பீகார் மற்றும் சண்டிகரில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

**>>>>>><<<<<<**

தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் சேலம் அணி இன்று மதுரை அணியை எதிர்கொள்கிறது.

திண்டுக்கல்லில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**>>>>>><<<<<<**